VIDYARTHIPLUS.COM

TN | PLUS TWO | MARCH - 2013

No. of Printed Pages : 8

**3051**

பதிவு எண் | | | | | | |

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

## (செய்யுளும், இலக்கணமும்)

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடை தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் VI க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **நான்கனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகளில் விடை எழுதுக. 4x2=8

1. நாடோறும் எதனைப் பாடுதல் வேண்டும் ?
2. அகநானூறு எத்தனை பகுதிகளாக உள்ளது? அவை யாவை ?
3. நடுங்க வரும் துன்பம் யாருக்கில்லை ?
4. இளந்தாவீதன் எடுத்துச் சென்ற ஆயுதம் யாது ?
5. கலம்பகம் - பெயர்க்காரணம் தருக.
6. கவிஞர் சுரதா துன்பம் எவ்வாறு சிதறிப்போகும் என்று கூறுகிறார் ?

[ திருப்புக

VIDYARTHIPLUS.COM



II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்துவரிகளில் விடை எழுதுக. 3x4=12

7. வரதநஞ்சையப் பிள்ளை எக்காரணங்களால் தமிழன்னையை வாழ்த்துவம் என்று கூறுகின்றார் ?

8. நரிவெரூஉத்தலையார் பயனில்லாத முதுமையுடையாரை விளித்துக் கூறுவனவற்றை எழுதுக.

9. நன்றி செய்தாரது நட்பை விடலாகாது - ஏன் ?

10. கோவலனைக் கண்ட பொழுது நிகழ்ந்த அற்புதம் யாது ?

11. கணையாழி கண்ட சீதையின் செயல்கள் யாவை ?

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக. 3x4=12

12. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்பட்டன யாவை ?

13. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

14. பாரதியார் காட்டும் அந்திவான வருணனையைத் தொகுத்து வரைக.

15. சிலுவையிற் பரித்தியாகம் செய்த பெருமானைக் கிருஷ்ணப்பிள்ளை எவ்வாறு அஞ்சலி செய்கிறார் ?

16. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும் வேண்டாததும் யாவை ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** இருபது வரிகளில் விடை எழுதுக. 1x8=8

17. 'வினைத்திட்பம்' பற்றித் திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

18. சீதையை அனுமன் கண்டு வந்து கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

19. குழந்தைத் தொழிலாளர் அவல நிலையைக் கவிஞர் அப்துல்ரகுமான் கூறுமாறு தொகுத்து வரைக.

VIDYARTHIPLUS.COM



V. பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. 4x1=4

20. ''கடமை புரிந்தான் இவனே''

(அ) கடமை புரிந்தவன் யாவன் ?

(ஆ) இது யார் கூற்று?

(இ) இது யாரிடம் கூறிய கூற்று ?

(ஈ) இத்தொடர் இடம் பெற்றுள்ள நூல் எது ?

அல்லது

21. ''வருவை யாகிய சின்னாள் வாழா ளாதல் நற் கறிந்தனை சென்மே''

(அ) இவ்வடிகள் எந்நூலில் இடம் பெற்றுள்ளன ?

(ஆ) இச் செய்யுள் அடிகளின் ஆசிரியர் யார் ?

(இ) யார் கூற்றாக அமைந்துள்ளது?

(ஈ) யாரிடம் கூறப்பட்டது ?

VI. 22. ''கண்டனென்'' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதி, அதுன் பாவகையையும் எழுதுக. 4+2=6

23. 'மறவற்க' எனத் தொடங்கும் குறளையும் 'தொழில்' என முடியும் குறளையும் அடிபிறழாமல் எழுதுக. 2+2=4

VII. 24. எவையேனும் **இரண்டு** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2+2=4

(அ) தூற்றும்

(ஆ) வந்தனன்

(இ) செய்க

(ஈ) கேட்டி

(உ) ஆடுகின்ற

(ஊ) விடுவார்

[ திருப்புக

VIDYARTHIPLUS.COM



25. பின்வரும் கீழ்க் கோடிட்ட தொடர்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** இலக்கணக்குறிப்பு எழுதுக : 3x2=6

(அ) தினம் தினம்

(ஆ) படர்முகில்

(இ) மாமணி

(ஈ) சேவடி

(உ) முட்புதர்

(ஊ) அவியா மதிவிளக்கு

26. எவையேனும் **இரண்டு** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. 2x2=4

(அ) பகலுறை

(ஆ) மாசற்றார்

(இ) நின்னருள்

(ஈ) கற்கோடி

(உ) தீக்குச்சி

(ஊ) பூஞ்சோலை

27. சான்று தந்து விளக்குக. 1x4=4

பாலைத்திணை

**அல்லது**

பொருண் மொழிக் காஞ்சித்துறை

28. "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை 1x4=4

இகழ்வார்ப் பொறுத்தல் தலை."

இக் குறட்பாவில் அமைந்த அணியைச் சுட்டி விளக்குக.

**அல்லது**

சொற்பொருட் பின்வரு நிலையணி அல்லது எடுத்துக் காட்டு உவமையணி விளக்குக.

VIDYARTHIPLUS.COM



VIII. பொருத்துக : 4x1=4

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| 29. இராசராசசோழனுலா | - | பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் |
| 30. திருவேங்கடத்தந்தாதி | - | குமரகுருபரர் |
| 31. மதுரைக் கலம்பகம் | - | ஆசிரியர் பெயர் தெரியவில்லை |
| 32. முக்கூடற் பள்ளு | - | ஒட்டக்கூத்தர் |
| | - | காரைக்காலம்மையார். |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 16x1=16

33. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன்
(அ) சிவன்
(ஆ) திருமால்
(இ) முருகன்

34. புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள்
(அ) 11
(ஆ) 65
(இ) 75

35. அகநானூறு மணிமிடை பவளத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை
(அ) 100
(ஆ) 120
(இ) 180

VIDYARTHIPLUS.COM



36. நற்றிணையைத் தொகுப்பித்தவன்

(அ) ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்

(ஆ) ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்

(இ) பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி

37. 'கபிலரை வாய்மொழிக் கபிலர்' என்று போற்றியவர்

(அ) நக்கீரர்

(ஆ) பெருங்குன்றூர்க் கிழார்

(இ) மாறோக்கத்து நப்பசலையார்

38. 'குறட்பா' என்பது

(அ) நாலடி வெண்பா

(ஆ) மூவடி வெண்பா

(இ) ஈரடி வெண்பா

39. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது

(அ) பழமொழி

(ஆ) திருவள்ளுவ மாலை

(இ) நாலடியார்

40. சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு

(அ) படலம்

(ஆ) இயல்

(இ) காதை

41. 'சிறிய திருவடி' என்றழைக்கப் படுபவர்

(அ) கருடன்

(ஆ) அனுமன்

(இ) வீடணன்

VIDYARTHIPLUS.COM



42. வீரமாமுனிவர் தொகுத்த அகராதி

(அ) சதுரகராதி

(ஆ) பேரகராதி

(இ) அரும்பத அகராதி

43. 'பிரபந்தம்' என்னும் வடசொல் உணர்த்தும் பொருள்

(அ) நகைச்சுவை நூல்

(ஆ) நன்கு கட்டப்பட்டது

(இ) அறிவுரை நூல்

44. பாரதிதாசன் வெளியிட்ட இதழ்

(அ) தேன்மழை

(ஆ) குயில்

(இ) தென்றல்

45. இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்

(அ) பாரதியார்

(ஆ) பாரதிதாசன்

(இ) நாமக்கல் கவிஞர்

46. 'உவமைக்கவிஞர்' எனப் பாராட்டப்பட்டவர்

(அ) சுப்பிரமணிய பாரதி

(ஆ) சுரதா

(இ) கண்ணதாசன்

47. 'கிறித்துவக்கம்பர்' என்றழைக்கப்பட்டவர்

(அ) கம்பர்

(ஆ) வீரமா முனிவர்

(இ) எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை

[ திருப்புக

VIDYARTHIPLUS.COM



48. சுந்தரர் தேவாரம்

(அ) முதலாம் திருமுறை

(ஆ) ஏழாம் திருமுறை

(இ) பன்னிரண்டாந்திருமுறை

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக. 2+2=4

49. எந்நன்றி கொன்றார்க்கும் ________ உய்வில்லை

செய்ந்நன்றி ________ மகற்கு

50. எண்பொருள வாகச் ________ தான்பிறர்வாய்

நுண்பொருள் ________ தறிவு.

- o 0 o -